| | | | |
|---|---|---|---|
| 09.03.2021 | அ வ .எண்.198/18 | வா.சா.1 | திரு.சண்முகசுந்தரம் த/பெ.சுப்பையா கவுடர் |

சாட்சி திரும்ப வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

<u>குறுக்கு விசாரணை -( 1 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில்)</u>

க.ச.எண். 747 ன் மொத்த விஸ்தீரணம் 3.74 ஏக்கர் ஆகும். அந்த 3.74 ஏக்கரில் யார் யார் அனுபவத்தில் உள்ளார்கள் என்றால் நான்கு பேர் உள்ளார்கள். அதில் நான், சுப்பைய கவுடர் ரங்கராஜ் மற்றும் ரவிச்சந்திரன் ஆகியோர் உள்ளோம். ரங்கராஜ் 87 செண்டிலும், ரவிச்சந்திரன் 85 செண்டிலும், எனக்கும் என் அப்பாவிற்கும் சேர்த்து 2 ஏக்கரா 4 செண்ட்டும் ஒதுக்கப்பட்டது. மீதி பத்து செண்ட் வண்டிப்பாதைக்கும் விடப்பட்டது. 3.74 ஏக்கரா நான்கு பேருக்கும் பிரிந்ததற்கு ஆவணங்கள் இருக்கிறதா என்றால் இருக்கிறது. 745 எண் பட்டாவில் இருக்கிறது. நான்கு பேருக்கும் பிரிந்ததை காண்பிக்க எந்த வித பாகப்பிரிவினை பத்திரமும் இல்லை என்றால் சரிதான். எனக்கு 1 ஏக்கரா 37 செண்ட் விஸ்தீரணமுள்ள பூமியை மாரண்ண கவுடரும் அவருடைய மகன்களும் கிரையம் கொடுத்துள்ளார்கள் . அந்த கிரைய பத்திரத்தில் 1 ஏக்கரா 37 செண்ட் அவர்களுக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் வந்தது என்ற சொல்லவில்லை என்றால் சரியல்ல. பட்டா எண். 745 ல் அவர்களுக்கு உரிமை இருக்கிறது. 3.74 எக்கராவில் 1.37 ஏக்கரா மாரண்ண கவுடருக்கும் அவருடைய மகன்களுக்கும் எவ்வாறு பிரிந்தது என்பதற்கு ஆவணம் இல்லை என்றால் அனுபவ ரீதியாக தான் பிரிந்தது. அவர்கள் என்ன அனுபவத்தில் இருந்தார்களோ அந்த அனுபவத்தை வைத்து தான் எனக்கு எழுதி கொடுத்தார்கள் என்றால் சரிதான். 747 என்பது 747/1 மற்றும் 747/2 என உட்பிரிவுகள் ஆனதாக சொல்லியிருக்கிறேன். எப்பொழுது உட்பிரிவு ஆனது என்றால் 1960 க்கு முன்பே உட்பிரிவு ஆனது. அந்த சொத்துக்களை பொறுத்து 1980 ல் ஒரு திருமக்காள் சுப்புலட்சுமி அவர்களுடைய பங்கை சுப்பைய கவுடருக்கு விற்பனை செய்தார்கள் . அந்த பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் 29.05.1991 ல் மாரண்ண கவுடரிடம் வாங்கியதாக சொல்கிறேன். அந்த பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. நான் கிரையம் பெறும்போதே க.ச. 747 என்பது க.ச. 747/1 , 747/2 என உட்பிரிவுகள் ஆகியிருந்தது என்றால் சரிதான். என்னுடைய தாவாவிலும் சாட்சியத்திலும் வழக்கு சொத்தை 1/4 பங்கு உரிமையோடு கிரையம் பெற்றேன் என்று சொல்லி

உள்ளேன் என்றால் சரிதான். தாவா தடத்தை 1/4 பங்கு உரிமையோடு கிரையம் பெற்றதை காண்பிப்பதற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 747 ல் பத்து செண்ட் தடத்திற்காக விடப்பட்டது என்பதையும் அந்த தடத்தில் க.ச. 747 உரிமையாளர்களுக்கு தான் பாத்தியம் உள்ளது என்பதை காண்பிப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் வாங்கிய 1.37 செண்டில் தான் மாதைய கவுடருக்கு 87 செண்ட் கிரையம் கொடுத்தேன் என்றால் சரிதான். நான் என்ன சொத்தை வாங்கினேனோ அதில் ஒரு பாகத்தை மாதைய கவுடருக்கு கொடுத்திருக்கிறேன் என்றால், சரிதான். நான் மாதைய கவுடருக்கு கிரைய ம் கொடுக்கும்போது என்ன காலை எண்ணில் அமைந்திருந்தது என்றால், 747/1 காலையில் அமைந்திருந்தது. 747/1 என்பது 747/1 ஏ, 747/1 பி மற்றும் 747/1 சி என் உட்பிரிவுகள் ஆகி உள்ளது. 2010 க்கு பின்னிட்டு அவ்வாறு உட்பிரிவுகள் ஆனது. நான் கிரையம் பெறும் காலத்திலேயே 1.37 ஏக்கரா 747/1 காலையில் தான் அமைந்திருந்தது. ஆனால் மாரண்ண கடவுரும் அவருடைய மகன்களும் எனக்கு கிரையம் கொடுத்த பத்திரத்தில் எழுதும்போதுஅந்த பூமி 747/1 காலையில் அமைந்துள்ளதாக எழுதவில்லை என்றால் சரிதான். அதேபோல் 747/2 காலையில் அமைந்துள்ள தடம் தான் அந்த பூமிக்கு போகும் தடம் என்று எழுதப்படவில்லை என்றால் சரிதான். பொதுவாக மாமூல் வழித்தடம் என்று தான் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் மாதைய கவுடருக்கு கிரையம் கொடுத்த பத்திரத்திலும் 747/1 ல் பூமி அமைந்துள்ளதாக குறிப்பிட்டு கிரையம் செய்து கொடுக்கப்படவில்லை என்றால் சரிதான். மாதையகவுடருக்கு கிரையம் செய்த பத்திரத்திலும் 747/2 ல் அமைந்துள்ள தடம் என்று குறிப்பிட்டு கிரையம் செய்து கொடுக்கவில்லை. மாமூல் வழித்தடம் என்று தான் குறிப்பிடப்பட்டிருந்தது. உட்பிரிவு 747/1 சி காலையில் உள்ள பூமி தான் எனக்கும் சுப்பைய கவுடருக்கும் பாத்திய ப்பட்டது என்றால் சரிதான்., அதே போல்747/1 பி என்பது ரவி என்பவருக்கும் 747/1 ஏ என்பது ரங்கராஜ் என்பவருக்கும் பாத்தியப்பட்ட பூமி என்றால் சரிதான். 747/1 சி க்கு வடபுறமாக எனக்கு எந்த பூமியும் இல்லை என்றால் சரிதான். அதே போல் 747/1 ஏ க்கு வடபுறமாக உள்ள 748/1 ல் அமைந்த பூமிகள் 3 ம் நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். எங்கள் பூமிக்கு தென்புறமாக உள்ள 729/1 என்ற காலையில் வாரி புறம்போக்கு அமைந்துள்ளது என்றால் சரிதான். 729/1 காலையில் இருந்து வாரி புறம்போக்கு பூமியில் இருந்து தான் என் பூமிக்கு வர

முடியும். 747/2 காலை வழியாக தான் 747/1 சி க்கு வர முடியும். 729/1 வாரி புறம்போக்கில் இருந்து ஆரம்பிக்கும் வழியானது 747/1, 748/1 ஆகிய காலைகளின் கிழபுறமாக வடக்கு நோக்கி செல்கிறது என்றால், 748 /1 ன் வழியாக போவதில்லை. 747/1 ஏ லேயே அந்த தடம் முடிவடைகிறது. அந்த தடம் 747/1 ஏ வில் முடிவடைவதில்லை என்றாலும், 748 காலைகளுக்கும் அந்த தடம் தான் போகிறது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.

மேலே கண்ட சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் அவர் கூறியவாறு பதியப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரிடம் கையொப்பம் /கைரேகை பெறப்பட்டது.

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்.

SUB COURT, METTUPALAYA